**அக்டோபர் - 11**

**"கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே, அதின் நடுவிலிருந்தது புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள்." - ஏசா 52 : 11.**

தேவனுடைய ஊழியக்காரர்களுக்கும், தீமையின் ஊழியக்காரர்களுக்கும், ஊடே தெளிவான ஒரு பிரிவினையை உண்டாக்குவதே தெய்வீக ஒழுங்காய் இருக்கிறதாகத் தோன்றுகிறது. தேவனுக்காகச் சாட்சி கூறுவதின் சிலாக்கியமோ அல்லது சத்தியத்திற்காக ஸ்தானாதிபதிகளாக இருப்பதற்குரிய சிலாக்கியமோ, கர்த்தருடைய சொந்த ஜனங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிற ஒரு தயை ஆகும். அந்த நற்செய்தியின் தூதர்களாயிருப்பதற்கு தீயோனையோ அல்லது விழுந்துபோன பிசாசுகளையோ, தீய மனிதரையோ அல்லது தீய பெண்களையோ அவர் நாடுகிறதில்லை. கர்த்தருடைய ஜனங்கள் இந்த விசயத்தை ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும். கர்த்தரோடு இருதய ஐக்கியத்தில் இருப்பதின் சான்றை தராத யாருடைய ஊழியத்தையும் தீவிரமாக ஆட்சேபிக்க வேண்டும். தேவன் துன்மார்க்கனை நோக்கி சொல்லுகிறார், "நீ என் உடன்படிக்கையை உன் வாயினால் சொல்ல உனக்கு என்ன நியாயமுண்டு, சிட்சையை நீ பகைத்து என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எரிந்து போடுகிறாய்." **(சங் 50:16,17)** **- Z '04, 28 (R 3309)**

கூடாரத்திலும், ஆலயத்திலும் ஆசாரியர்களினால் தங்களுடைய ஊழியங்களில் உபயோகப்படுத்தப்பட்ட பாத்திரங்கள் வேதாகமத்தின் போதனைகளையும், கட்டளைகளையும், வாக்குத்தத்தங்களையும், புத்திமதிகளையும், தீர்க்க தரிசனங்களையும், சரித்திரங்களையும், அடையாளங்களையும் குறிக்கின்றன. இவைகளை வேதாகம வாக்கியங்களோடு சேர்த்துப் போதித்தல், தப்பான உபதேசங்களை தவறென நிரூபித்தல், சுத்திகரித்தல், குண அபிவிருத்தி செய்தல் ஆகிய இந்த நோக்கங்களுக்காக இவைகள் உபயோகிக்கப்படுகின்றன. பாத்திரங்களை சுமப்பது என்றால், இவைகளைக் கொண்டு நாம் ஊழியம் செய்கிறோம் என்பதை தெரிவிப்பதாகும். தங்களுடைய ஊழியங்களில், மாம்சத்தின் எல்லா அசுசியிலிருந்தும், ஆவியின் எல்லா அசுசியிலிருந்தும் சுத்தமாயிருத்தல், தேவனுடைய ஜனங்களுக்குத் தகுதியாயிருக்கிறது. ஆகவே அவர்கள் வேதாகமம் கொண்டுள்ள தண்ணீராகிய சத்தியத்தினால் ஒவ்வொரு நாளும் தங்களைக் கழுவ வேண்டும். இது அவர்களைத் தங்களுடைய ஊழியத்திற்கென்று சுத்திகரித்து (தேவனுடைய) வார்தையைக் கொடுக்கத் தகுந்த விதமாக தகுதியுள்ளவர்களாக்கும். **- P '34, 143.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**எண் 4:1-20; 18:1-7; எஸ்றா 1:7-11; எசே 3:4; மத் 10:5-16,38,39; 2கொரி 7:1; 1தீமோ 1:18-20; 3:4; 5:21,22; 2தீமோ 2:21-26; 3:1-14; 4:1-5.**

**கோபுர வாசிப்பு : Z '13, 184 (R 5258).**

**வினாக்கள் : சுத்திகரிப்பு வேலை இந்த வாரத்தில் நடைபெற்றதா? எப்படி? அதில் உதவியாக அல்லது இடையூறாக இருந்தவை எவை? அவை என்ன பலனை அளித்தன?**